# தீர்க்கதரிசனம் 1



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# புத்தகத்தின் தலைப்பு: **இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசி**

---

அவருடைய (சகோ. பிரன்ஹாமுடைய) தனிப்பட்ட ஊழியத்தின் தொடர்பாக அவர் தரிசனங்களை கண்டு, அவை நிறைவேறின என்பது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக நிகழவிருக்கும் சம்பவங் களையும் அவர் தரிசனத்தில் கண்டு, அவை களை அவர் வெளிப்படையாய் உரைத்திருக் கிறார். இவைகளில் மிக முக்கியமாக கருதப் படுபவை பின்வரும் ஏழு சம்பவங்களாம்.

1933ம் ஆண்டு ஜுன் மாதம் அவர் பழைய மேசன்களின் பழைய கூடத்தில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கையில், கர்த் தருடைய வருகைக்கு முன்பு நிகழவிருக்கும் ஏழு முக்கியமான சம்பவங்களை அவர் தரிசனமாகக் கண்டார். ஜுன் மாதம் ஒரு நாள் காலையில் அவர் ஞாயிறு பள்ளி வகுப்புக்கு போதிப்பதற்கு முன்பு அவர் ஆவிக்குள்ளா யிருந்த போது, இந்த சம்பவங்கள் வரிசையாக

தரிசனத்தில் காணப்பட்டன. இத்தாலியா நாட்டின் சர்வாதிகாரி பெனிடோ முசோலினி எத்தியோப்பியாவின் மீது போர் தொடுப்பான் என்று அவர் தரிசனம் கண்டார். அப்பொழுது ஒரு சத்தம் அவரிடத்தில், “எத்தியோப்பியா அவனுடைய (முசோலினியின்) கால்களில் விழும்” என்றுரைத்தது. இருப்பினும், அந்த சத்தம் தொடர்ந்து, அந்த சர்வாதிகாரி பயங்கரமான முடிவை அடைவான் என்றும், அவனுடைய சொந்த ஜனங்கள் அவன் மேல் உமிழ்வார்கள் என்றும் தீர்க்கதரிசனமாக முன்னுரைத்தது.

இதற்கடுத்து உண்டான தரிசனத்தில், ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த அடோல்ஃப் ஹிட்லரை தலைமையாகக் கொண்ட ஜெர்மனி யுடன் அமெரிக்கா போரில் ஈடுபடும் என்பதைக் காண்பித்தது. அப்பொழுது எழுந்த சத்தம், இந்த பயங்கரமான போர் ஹிட்லரை மடங்கடித்து, அவனுக்கு மர்மமான முடிவு உண்டாகும் என்று முன்னுரைத்தது. இந்த தரிசனத்தில், அவருக்கு ‘**லீக்ஃபிரிட் எல்லை**’

காண்பிக்கப்பட்டு, அங்கு அநேக அமெரிக்கர் கள் உயிரிழப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த தரிசனத்துடன் தொடர்பு கொண்ட மற்றொரு தரிசனம், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜெர்மனியுடன் போர் தொடுப்பார் என்றும் அதன் விளைவாக அவர் நான்காம் முறை யாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் முன்னுரைத்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

தரிசனத்தின் மூன்றாம் பாகம், இவ்வுல கில் பாசீசம், நாசீசம், கம்யூனிஸம் என்னும் மூன்று கொள்கைகள் காணப்பட்ட போதிலும், முதல் இரண்டு கொள்கைகள் ஒன்றுமில் லாமல் போய், கம்யூனிஸம் மட்டும் தழைத் தோங்கும் என்பதைக் காண்பித்தது. பாசீசமும் நாசீசமும் கம்யூனிஸத்தில் முடிவடையப் போவதால், இனி வரவிருக்கும் நிகழ்ச்சிகளின் காரணமாக, அவர் ருஷியாவின் மேல் கண்ணோட்டமாய் இருக்க வேண்டுமென்று அந்த சத்தம் அறிவுறுத்தியது.

அவருக்குண்டான நான்காம் தரிசனத்தில் யுத்தத்துக்குப் பின்பு தொழில்நுட்பத் துறையில் (technology) ஏற்படவிருக்கும் பிரம்மாண்டமான முன்னேற்றங்களைக் குறித்து முன்னுரைக்கப் பட்டது. அதற்கு அடையாளமாக, பிளாஸ்டிக்கி னால் செய்யப்பட்ட கூரையைக் கொண்ட முட்டை வடிவமுள்ள ஒரு மோட்டார் வாகனம் யாரும் அதை ஓட்டாமலே தூரத்திலிருந்து முழுவதுமாக இயக்கப்பட்டு (remote control) அழகான நெடுஞ்சாலைகளின் வழியாய் போய்க் கொண்டிருந்தது. அந்த வாகனத்துக்கு திருப்பும் சக்கரம் (Steering Wheel) இருக்க வில்லை. அந்த வாகனத்தில் சென்று கொண் டிருந்தவர்கள் 'செக்கர்ஸ்' (checkers) போன்ற ஏதோ ஒரு விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பது போல் காணப்பட்டது.

50. அவருக்குத் தோன்றின ஐந்தாம் காட்சி உலகத்தின் ஸ்திரீகளுடன் சம்பந்தப்பட்ட தாயிருந்தது. அந்த காட்சியில் ஸ்திரீகளின் நல்லொழுக்கம் வேகமாக சிதைந்து கொண்டு வருவது காண்பிக்கப்பட்டது. அவள் தனக்களிக் கப்பட்ட வோட்டுரிமையின் மூலம் சுதந்தரம்

என அழைக்கப்படுவதை பெற்று உலக விவகாரங்களில் பிரவேசிக்கத் தொடங்கின பிறகு, விரைவில் தன் உடலை அதிகமாக வெளிப்படுத்தும் உடைகளை உடுத்த ஆரம்பித் தாள். அவள் தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டு ஆண்களின் உடைகளை அணிந்து கொண்டாள். முடிவில் அந்த தரிசனத்தில் அவள் ஏறக்குறைய முழு நிர்வாணியாய், அத்திஇலை வடிவிலும் அளவிலும் உண்டாக் கப்பட்ட ஒரு மிகச்சிறிய துணியால் அவளை மறைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பெண்மை தரம் குறைவாக எண்ணப்பட்டு, தேவனுடைய வார்த்தை உரைத்துள்ளபடி மாம்சமான அனைத்தின் மேலும் பயங்கரமான ஒரு சிதைவு உண்டாகி, அதனுடன் கூட சீர்குலைதலும் உண்டானது.

அதன்பிறகு, சிறப்பாக உடுத்தியிருந்த மிகவும் அழகான ஒரு பெண் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தோன்றினாள். மிகுந்த அதிகாரம் அளிக்கப்பட்டது. அவளுடைய தோற்றம் மிகவும் அழகாக இருந்தபோதிலும், விவரிக்க இயலாத ஒரு கடினத்தன்மை

அவளில் காணப்பட்டது. அழகுள்ள அவள், மிகக் கொடூரமும், பொல்லாப்பும், தந்திரமும் நிறைந்தவளாயிருந்தாள். அவள் தன் அதிகாரத்தை நாடெங்கிலும் பிரயோகித்து, ஜனங்களின் மீது முழு ஆதிக்கம் செலுத்தினாள். இத்தகைய ஒரு பெண் எழும்புவாள்; அல்லது தரிசனத்தில் காண்பிக்கப்பட்ட இந்த பெண், வேதத்தில் ஸ்திரீயாக சித்தரிக்கப்பட்டுள்ள ஒரு ஸ்தாபனத்துக்கு அடையாளமாயிருக்கக் கூடும் என்பதை அந்த தரிசனம் உணர்த்தினது. அவள் யாரென்பதை ஒரு சத்தம் உரைத்து வெளிப்படுத்தாமல் போனாலும், வேகமாக எழும்பி வரும் ரோமன் கத்தோலிக்க சபைக்கு இந்த ஸ்திரீ எடுத்துக்காட்டாய் இருக்கக் கூடும் என்று அவருடைய இருதயத்தில் தோன்றினது. அவர் எழுதிவைத்த இந்த தரிசனத்தின் முடிவில், இது ஒருக்கால் கத்தோலிக்க சபையாய் இருக்கலாம் என்னும் குறிப்பை எழுதியுள்ளார்.

51. இன்னும் ஒருமுறை பார்க்கும்படி அந்த சத்தம் அவருக்கு உத்தரவிட்டது. அவர் திரும்பிப் பார்க்கையில் ஒரு பெரிய வெடி அமெரிக்க தேசம் முழுவதையும் பாழாக்கி,

அழிந்து போன அந்த இடம் புகைக்காடாய் காணப்பட்டது. கண்கள் காணும் தூரம் வரைக் கும் அது குழிகளும் புகைந்து கொண்டிருக்கிற குப்பைகளும் நிறைந்து காணப்பட்டது. மனிதர் எவருமே காணப்படவில்லை.

அதன்பிறகு தரிசனம் மறைந்தது.

★★★★★